(III).மகாபலிபுரத்தில் மிகப்பெரிய பாறையில் காணப்படும் கங்கையின் இறக்கம் எனும் சிற்பம் பற்றி மதிப்பீடு செய்க.

4.இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் வளமான ஒரு நாகரிகம் சிந்துவெளி நாகரிகம் ஆகும்.

(i).சிந்துவெளி நாகரிகத்தை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் **இருவரைக்** குறிப்பிடுக.

(II).சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்களும்,முத்திரைகளும்அங்கு காணப்பட்ட சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்துகின்றன சுருக்கமாக விளக்குக.

(III).சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகளின் ஊடாக பொதுவான கட்டடக்கலை அம்சங்களை விபரிக்குக.

**உபபகுதி - இ**

**(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)**

5.உரோமக் கலை வரலாறு கிரேக்க சம காலமாக இருந்தாலும் கிரேக்க கலைகளைவிடவும் உயர்வு பெற்று காணப்படுகின்றது.

(I).உரோமானிய சக்கரவர்த்திகளின் வெற்றியை நினைவுகூரும் அரைவளைவுகள் **நான்கை** குறிப்பிடுக.

(II).உரோமானிய நினைவுத் தூண்கள் கட்டடக் கலையின் சிறந்த நிர்மாணிப்பாகும் இவற்றை சுருக்கமாக விளக்குக.

(III). கிரேக்கக் சிற்பக்கலையை மிஞ்சும் வகையில் உரோம சிற்பக்கலை ஆக்கங்கள் பாரிய வளர்ச்சியடைந்தன .இவற்றில் தனிநபர் பண்புகளை வெளிப்படுத்தும் தலைச்சிற்பங்கள் சான்றாக உள்ளன உதாரணத்துடன் ஆராய்க.

6.கொன்ஸ்ரன்ரைன் சக்கரவர்த்தியினால் உருவாக்கப்பட்ட பைசாந்தியக் கலையானது மொசைக் கலையின் வளர்ச்சிக்கு வித்திட்டது.

(I).பைசாந்தியக் கட்டடக் கலையில் சிறப்பாக விளங்கும் தேவாலயங்கள் **மூன்று** தருக.

(II).பைசாந்திய ஓவியக்கலையில் புகழ் பெற்ற ஓவியமான தியடோரா அரசியும் பரிவாரங்களும் (தியடோரா அரசியும் சேவகர்களும்)என்னும் ஓவியத்தின் சிறப்பு அம்சங்களை சுருக்கமாக தருக.

(III).கோதிக் கட்டடக் கலை பண்புகளை தந்து அவற்றில் சிறந்து விளங்கும் அம்சமான வர்ணக் கண்ணாடிக்கலை பற்றி உதாரணத்துடன் விளக்குக.

***

**வடமாகாணக் கல்வித்திணைக்களம்**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பயிற்சிப் பரீட்சை- 2017**

**சித்திரக்கலை II** **மூன்று மணித்தியாலம்**

*விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது.ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால் அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

**இயற்கைக் கற்றலும் அசையாப் பொருடள் கூட்டமும்**

பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன் கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணம் தீட்டுக.

*கடதாசிப் பரப்பினை பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.

*பொருள்களினதும் செடியினதும் இயல்பு,வெளிப்புறத்தன்மை,பரிமாணம்,கண்மட்டம்,முப்பரிமாண இயல்பு தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.

*பொருள் தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி,இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணம் தீட்டுக.

*வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.

*பொருள் தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.

*பொருள் தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.

*நீர் வர்ணம்,போஸ்டர் வர்ணம்,தூள் வர்ணம்,பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வடமாகாணக் கல்வித்திணைக்களம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பயிற்சிப் பரீட்சை- 2017

சித்திரக்கலை II

மூன்று மணித்தியாலம்



# வடமாகாண கல்வித்திணைக்களம்

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பயிற்சிப் பரீட்சை – 2017**

**சித்திரக்கலை III** **மூன்று மணித்தியாலம்**

அறிவுறுத்தல்கள்

*கீழே தரப்பட்டுள்ள **அ,ஆ,இ** ஆகிய பகுதிகளிலிருந்து **ஒரு** பகுதியை மாத்திரம் தெரிவு செய்க. அதிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்து வர்ணச் சித்திரம் ஒன்றை வரைக.

*விரும்பிய வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ள முடியும்.

(நீர் வர்ணம்,போஸ்ரர் வர்ணம்,பஸ்ரல் வர்ணம் ,அல்லது சிலவற்றின் கலவை).

**பகுதி – அ**

**சித்திர ஒழுங்கமைப்பு**

பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் **ஒன்றை** மட்டும் தெரிவு செய்க.

1.சித்திரைப் புது வருடப்பிறப்பில் றபான் அடிக்கும் பெண்கள் அல்லது தயிர் முட்டி உடைக்கும் நிகழ்வு.

2.நெல் வயலில் களை பிடுங்கும் ஆண்களும்,பெண்களும்.

3.தெருவோர வியாபாரத்தில் நடைபெறும் வியாபாரச் செயற்பாடு.

**பகுதி – ஆ**

**அலங்கார ஆக்கம்**

4.ஒரு வர்ணச்சாயலைப் பயன்படுத்தி சேலை முகதலைப்பு ஒன்றிற்கான அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.

5.பாரம்பரிய மலரலங்கார வடிவங்களைப் பயன்படுத்தி திரைச் சீலை ஒன்றிற்கான அலங்காரம்.

6.நிலத்தை அழகுபடுத்துவதற்கு பயன்படுத்தப்படும் மாபிள் அலங்காரம் ஒன்றை திட்டமிட்டு நிர்மாணிக்குக.

**பகுதி – இ**

**கிறபிக் சித்திர நிர்மாணிப்பு**

7.“டெங்கிலிருந்து எம்மை பாதுகாப்போம் “ என்னும் தலைப்பிலான அழகிய சுவரொட்டி ஒன்றை நிர்மாணிக்குக.

8.பழரசப் போத்தலுக்கான பெயர்ச்சுட்டி (லேபல்) ஒன்றை நிர்மாணிக்குக.

9.மூன்று வர்ணங்களைக் கொண்ட பொதி சுற்றும் தாள் ஒன்றிற்கான அலங்காரம் ஒன்றை வடிவமைக்குக.

***